அதிகமான பேருந்துகளை ஓட்ட அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால், மொத்தமாக 4 மணிக்கு ஒரு முறை எல்லா பஸ்களும் ஒன்றன் பின் ஒன்றாகப் போய்விடுகின்றன. மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையினால் அதைக் குறைக்கும் வகையில் பரவலாக, சரியான இடைவெளியில் பேருந்துகள் வரும் வகையில், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் அதிகமான பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: என்னுடைய கவனத்திற்கு இப்போது அதைத் தெளிவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்வதோடு நமக்குக் கிடைப்பது மாதம் ஒன்றுக்கு 125 பேருந்துகள்தான். அந்தப் பேருந்துகளை நாம் தமிழகம் பூராவும் இயக்கவேண்டிய நிலையில் புதிதாகக் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப் படும் நிலையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு எவ்வளவு ஒதுக்கீடு கிடைக்கிறதோ அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரேநேரத்தில் நான்கு வண்டிகள் ஓடுகின்றன என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கட்டபொம்மன் போக்கு வரத்துக்கழகம் அவர்கள் கையில் பேருந்துகளை வைத்துக் கொண்டு இயக்காமல் இல்லை. கிடைத்தவுடன் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திண்டுக்கல்—சென்னை விரைவுப் பேருந்துப் பணி

*வினா எண். 139 திருவேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

திண்டுக்கல்—சென்னை வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஓர் விரைவுப் பேருந்து விடும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சென்னையிலிருந்து திண்டுக்கல் வரை விரைவுப் பேருந்து விட மைலேஜ் இல்லை. திண்டுக்கல் வழியாகச் சென்னையிலிருந்து பொள்ளாச்சி வரை ஒரு பேருந்து விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பேருந்தில் திண்டுக்கல் பிரயாணிகளுக்கு என இருக்கைகள் ஒதுக்கப்பட உள்ளன.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: அப்படி ஒதுக்கப்படுகிற சீட்களில் குறைந்தது பாதியாவது ஒதுக்கப் படுமா? சென்னை—பெரியகுளம். சென்னை—கம்பம் வண்டி களில் திண்டுக்கல்லில் ஏறுகிற பயணிகளுக்கு தேவைப்பட்ட அளவில் சீட்கள் ஒதுக்கப்படுமா?

1981 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:— திண்டுக்கல் வந்து ஏறுகிற பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அதற்கேற்ப அந்த வழியாகப் போகிற எல்லாப் பேருந்துகளிலும் இருக்கைகள் ஒதுக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராகயிருக்கிறது.

திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: சென்னை-பொள்ளாச்சிக்கு சொகுசு வண்டிகள் (சூப்பர் டீலக்ஸ்) விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று பேருந்து இருப்பதைப்பொறுத்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கே. குப்புசாமி: பொள்ளாச்சியில் இருந்து திண்டுக்கல் வழியாக சென்னை வருகிற இந்த சொகுசு பேருந்தை பழனி வழியாக விட உத்தேசமுண்டா? அப்படியென்றால் பழனியில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பயணிகள் ஏறுவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நமக்கிருக்கிற பேருந்துகளில் தோராயமாக 42 இருக்கைகள்தான் இருக்கும். ஒவ்வொரு ஊருக்கும் எவ்வளவு ஒதுக்கமுடியும் என்றுபார்த்து பழனிவழியாக பேருந்து வருவதில் அதற்கான ஒதுக்கீடு செய்யப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள்

*வினா எண். 140 திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்பொழுது எத்தனை கால்நடை மருந்தகங்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) இரண்டுக்கும் குறைவாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் அதிக கால்நடை மருந்தகங்கள் திறக்க அரசு நடவடிக்கை ஏதும் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ)ஒன்று முதல் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அரசின் கொள்கைப்படி தேவையின் அடிப்படையில் கூடுதல் கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொருத்தும் அருகாமையில் இருக்கும் கால்நடை மருந்தகங்களைப் பொருத்தும் ஒவ்வொரு ஆண்டும் 10 கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.